அசல் வழக்கு எண். 58/2013 நாள்: 10.04.2026

பி.சா.2 திரு. ரெத்தினசாமி

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

19) பி.சா.ஆ.2-ல் பிரிப்படாத பாகம் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு பிரிப்படாத பாகத்தை பொறுத்து பரிவர்த்தனை ஆவணம் எழுதிக்கொடுத்தது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் எதிர்பாத்தியக் கோரிக்கை மனுவானது எனது அப்பா தாக்கல் செய்ததுதான் என்றால் சரிதான். அதில் தாவா சொத்திலுள்ள 2 பாகத்திற்கு தலா ரூ.30,000/- பெற்றுக்கொண்டதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். அதில் ஒரு 30000-க்கு மட்டும் நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.12-ல் என்னென்ன தகவல்கள் உரிமை சட்டத்தின் கீழ் கேட்கப்பட்டது என்ற குறிப்புகள் இல்லை என்றால் சரிதான்.

20) பி.சா.ஆ.12 க்கும் இந்த வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.13 ஆவணம் எனது தந்தைக்கும் அவரது 1 வது மனைவிக்கும் இடையே ஏற்பட்ட மனமுறிவு உத்தரவு ஆகும். மேற்படி பி.சா.ஆ.13 வேண்டுமென்றே காலதாமதமாக குறியீடு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 23-ம் பிரதிவாதி பாப்பி என்பவர் எனது தந்தையான 1-ம் பிரதிவாதிக்கு சட்டப்படியான வாரிசு என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பி.சா.ஆ.14-ல் தாவா சொத்தை பொறுத்து எதுவும் எழுதப்படவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.15-க்கும் வழக்கு சொத்துக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.15 ஆனது எதிர்பாத்திய கோரிக்கையில் உள்ள சொத்திற்குதான் மின் இணைப்பு கொடுக்க கூடாது என்று அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

21) சொத்திற்கும் எனது தகப்பனாருக்கும் எந்த சம்மந்தமும் இல்லாத நிலையில் பி.சா.ஆ.5 ஆவணத்தின் அடிப்படையில் பி.சா.ஆ.15-ஐ பொறுத்து வாதிக்கு தொந்தரவு கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் 11 வது பத்தியில் திருவையாறு குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் C.C.No.172/2010-ல் 2ம் வாதிக்கு ரூ.400/- அபராதம் விதிக்கப்பட்டதை எதிர்த்து செய்யப்பட்ட மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டு அபராத தொகை 2-ம் வாதியிடம் திருப்பிக் கொடுக்கப்பட்டது என்றால்

மேல்முறையீடு செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியாது. மேற்படி C.C.No.172/2010 நிலுவையிலிருந்து வருவதாக வாதிகள் கூறிவருகிறார்கள் என்று எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருப்பது தவறு என்றால் சரியல்ல.

22) எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் 11 வது பத்தியில் குறிப்பிட்டுள்ளதுபோல் தஞ்சாவூர் கூடுதல் அமர்வு நீதிமன்றத்தால் என்னையும் 1–ம் பிரதிவாதியையும் குற்றவாளிகள் இல்லை என 11.11.2024 அன்று அறிவித்த பிறகு மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் மேல்முறையீடு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எனது முதல்விசாரணை வாக்குமூலம் 12 வது பத்தியில் கூறியுள்ள சங்கதிகள் தவறு என்றால் சரியல்ல. எனது தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள பி.சா.ஆ.4 ஆவணத்தில் பிரிப்படாத பாகம் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் 13 வது பத்தியில் கூறியுள்ள சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல.

23) எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் 14 வது பத்தியில் கூறியுள்ள சங்கதிகள் பொய் என்றாலும், இந்த வாதிகள் எனது தந்தையிடமிருந்து எந்த பணமும் வாங்கவில்லை என்றாலும், அதனால் இந்த வாதிகள் தாவா சொத்தில் எந்த ஒரு பாகத்தையும் எழுதிக்கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்றாலும் சரியல்ல. நான்தான் இந்த வாதிகளுக்குரிய பாகத்தையும், மற்ற சொத்துக்களையும் அபகரிக்கும் நோக்கத்தில் செயல்பட்டு வருகிறோம் என்றால் சரியல்ல. உண்மையிலேயே இந்த வாதிகள் 1990 ல் தலா 30,000 பணம் வாங்கியிருந்தாலோ, 1981–ல் 3500 பணம் வாங்கியிருந்தாலோ நாங்கள் உரிய காலத்திற்குள் சொத்துக்களை எழுதி வாங்கியிருப்போம் என்றாலும், அவ்வாறு இல்லாத காரணத்தினால்தான் நான் அதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் தற்போது இந்த வாதிகள் தாக்கல் செய்துள்ள பாகபிரிவினையில் வழக்கில் காலம் கடந்து வாதிகளை துன்புறுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் எதிர்வாதம் செய்கிறோம் என்றால் சரியல்ல. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் 15 வது பத்தியில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறு என்றால் சரியல்ல. வாதிகள் கோரும் பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

S.d/ Rethinasamy

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.04.10 05:54:11 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU